31st October 1962]

திரு. மீ. கலியாணசுந்தரம் : சார் நம்முடைய ராஜ்யத்தில் ஒரு பார்லிமெண்ட் தொகுதிக்கு ஐந்து சட்டசபைத் தொகுதிகள் என்ற விதத்தில் இருக்கிறது. பல ராஜ்யங்களில் ஒரு பார்லி மெண்ட் தொகுதிக்கு ஏழு சட்ட சபைத் தொகுதிகள் இருக் கின்றன. அந்த அடிப்படையில் நம்முடைய ராஜ்யத்திலும் சட்ட சபைத் தொகுதிகளை அதிகரிக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அந்த மாதிரி உத்தேசம் அரசாங்கத்திற்கு இல்லை. இது பற்றி மாறுதல் ஏதேனும் செய்ய வேண்டுமென்றால், 'டிலிமிடேஷன் கமிஷன்' வந்து விசாரிக்கும் போது நாம் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளலாம்.

மேஜர் பஞ்சாயத்துக்கள் (சாலைகள் அமைத்தல்)

*1005 கேள்வி.—**திரு. எஸ். முருகையன் (திரு. முனு ஆதி சார்பாக) :** கனம் முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேஜர் பஞ்சாயத்தைச் சார்ந்த தெருக்களை அமைப் பதற்கு அரசாங்க விதிகளில் கண்டுள்ளவாறு மதிப்பீட்டுத் தொகை மிகக் குறைவு என்ற காரணத்தால் சாலைகள் அமைக்க கண்டிராக்டர்கள் முன் வருவதில்லை என்பதனை அரசாங்கம் அறியுமா ?

(இ) அப்படியானால், கூடுதலான தொகையில் ஒப்பந்தப் புள்ளி பெற பஞ்சாயத்துக்களை அனுமதிக்கும் உத்தேசமுண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) இல்லை.

(இ) எழவில்லை.

விலிங்டன் நீர்த்தேக்கம்

*1006 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூக்கா கீழ்ச் செருவாயில் வில்லிங்டன் ரிசர்வாயருக்கு வெள்ளாற்றிலிருந்து வரும் மெயின் சப்ளை வாய்க்காலை அகலப்படுத்த உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.

*1007 கேள்வி.—**திரு. கி. நாராயணசாமி பிள்ளை :** கனம் பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விருத்தாசலம் தாலூக்கா கீழ்ச் செருவாயில் இருக்கும் வில்லிங்டன் ரிசர்வாயர் நீர் பிடிப்பு மேடிட்டு இருப்பதைத் தகர்த்து ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. வெ. ராமையா : இல்லை.